



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகரத்தில் அமைந்துள்ள திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து ஏழை எளிய பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கினார் உடன் நகரக் கழகச் செயலாளர் வி. வினோத்குமார், ஒன்றிய பொறுப்பாளர் ஆர்த்தி ரவி, பொதுக்கு உறுப்பினர் வி.கிஷோர், நிர்வாகிகள் ஜி.எஸ். கணேசன், கே.எஸ். அசோக் குமார், ஜி. சித்திக் அலி, மத்தூர் பன்னீர்செல்வம், குமரன், சீனிவாசன், கு.அன்பு, அஜிஸ், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட அத்திப்பட்டு ஊராட்சி சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி கிளைக் கழகச் செயலாளர் எம்.டி.ஜி.கதிர்வேல் மற்றும் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் எம்.டி.ஜி.வடிவேல் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து 2000 நபர்களுக்கு அரிசி மற்றும் பெண்களுக்கு இலவச புடவை பத்தாம் வகுப்புமற்றும் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு ஊக்கத்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் அருகில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், ஒன்றிய பொறுப்பாளர்கள் ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஆ.ராஜா, முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து.தமிழரசன் கழக நிர்வாகிகள் கிளைக் கழகச் செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்!

# எழும்பூர் அரசு மருத்துவமனையில் ஜூன் 1 முதல் 3 வரை பிறந்த 75 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு அணிவித்தனர்!

சென்னை, ஜூன் 4

முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் விழாவை முன்னிட்டு எழும்பூர், அரசு மகப்பேறு மருத்துவமனையில் ஜூன் 1 முதல் 3 வரை பிறந்த 75 குழந்தைகளுக்கு தங்க மோதிரம், ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன் மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர்.

முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று (3.6.2025), சென்னை, எழும்பூர், அரசு மகப்பேறு மருத்துவமனையில் ஜூன் 1 முதல் 3 வரை பிறந்த 75 குழந்தைகளுக்கு தங்க மோதிரம், ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இதில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் இன்று தமிழ்நாடு முழுவதும் மட்டுமல்லாது உலகமெங்கும் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கூட மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நேற்றைக்கு முந்தினம் மதுரையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் செம்மொழி நாளாக கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களே இன்றைக்கு பங்கேற்று கலைவாணர் அரங்கில் நடைபெற்று வரும் பிரமாண்ட நிகழ்ச்சியில் பல்வேறு நிகழ்ச்சிகளும் விருதுகள் வழங்குதலும் பல்வேறு போட்டிகளில் பரிசுகள் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்குகின்ற வகையில் மிகச் சிறப்பாக வகையில் செம்மொழி நாள் தொடங்கி வைக்கப்பட்டு இருக்கின்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாள் ஏழை எளியவர்கள் பயன்பெறும் வகையில் நிகழ்வுகளை நடத்திட வேண்டும் என்கின்ற வகையிலும், அவர் காலத்தில் அவர் ஆற்றிய பணிகள் புரிந்த சாதனைகள் அவரால் இன்றைக்கு நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்புகள் போன்றவற்றை நினைவு கூறும் வகையிலும் இன்றைக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்று அறிவிப்புகள் அறிவித்திருந்தார். அந்த வகையில் 102 நிகழ்ச்சிகள் அறிவுறுத்தப்பட்டிருந்தது, அந்த 102 நிகழ்ச்சிகளை பொறுத்தவரை தமிழ்நாடு முழு வதிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால்முன்னெடுக்கப்பட்ட விஷயங்களை முன் மாதிரியான விஷயங்களை இன்றைக்கு மீண்டும் மக்களுக்கு நினைவூட்டுகிற வகையில் இந்த பிறந்தநாள் விழாவில் அங்கேயே சென்று இந்த கொண்டாட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று தலைமை கழகம் அறிவுறுத்தி இருக்கின்றது.

அந்த வகையில் இன்று எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களுடைய சீரிய ஏற்பாட்டில் எழும்பூர் பகுதி கழகங்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் மதிப்பிற்குரிய மேயர் உள்ளிட்டவர்களும் சிறப்பான நிகழ்வு இப்போது இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஜூன் 1, 2, 3 ஆகிய மூன்று நாட்களுக்கு இந்த மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு குறிப்பாக 48 ஆண் குழந்தைகள், 27 பெண் குழந்தைகள் என 75 குழந்தைகள் இந்த மூன்று நாட்களில் பிறந்திருக்கிறது. 75 குழந்தைகளுக்கும் தங்க மோதிரங்கள் வழங்குகின்ற சிறப்புமிக்க நிகழ்வு நடைபெற இருக்கின்றது.

தங்க மோதிரம் மட்டுமல்லாமல் அவர்களுக்கு தேவையான ஒரு பெட்டகங்கள், மண்ணா ஹெல்த் மிக்ஸ் பவுடர், இமாலயா கிட், பிஸ்கட், தண்ணீர் கேன், குழந்தைகளின் தேவையான துணி, கூடை, குழந்தைகளுக்கு தேவையான பெட், கிண்ணம், கரண்டி, பாலாடை, டிரைஃப்ரூட் என ஒவ்வொரு பச்சிளம் குழந்தைகளுக்கும் என்ன தேவை இருக்கின்றதோ அவற்றுக்குண்டான ஒரு பெட்டகம் இன்றைக்கு ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. மிகச்சிறப்பான இந்த நிகழ்வு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுகவின் சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களுடைய முன்னெடுப்பில் சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கின்றது.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிசந்திரன், அரசு மகப்பேறு மருத்துவமனை இயக்குநர் டாக்டர் சுமதி, பகுதி செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.எஸ். எம். நாதன், பொதுக்குழு உறுப்பினர் திருமதி. நிர்மலா தேவி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ராஜேஷ்வரி ஸ்ரீதர், திருமதி. பாத்திமா முசாபர், பரிதி இளம்சுருதி, சுந்தராஜன், வட்டச்செயலாளர்கள் அரிகிருஷ்ணன் இ.மொய்தீன், வி.விஜயகுமார், ஆர். பாபு, திருமதி.வான்மதி கதிரவன், பகுதி அவைத்தலைவர் எஸ்.ரசூல், பகுதி துணைச் செயலாளர் திருமதி.கே.அன்னபூர்ணி, பொருளாளர்.எஸ்.ஜெகதீசன், விளையாட்டு அணி அமைப்பாளர் ஆர்.கோபி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# திருக்குவளையில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து - மரியாதை!

நாகை , ஜூன் 4 -

நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் பிறந்த இல்லத்தில் கலைஞர் திருஉருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் இல்லத்தில் கலைஞரின்தந்தை பெயரில் முத்து வேலர் நூலகமாகவும், தாயார் பெயரில் அஞ்சுகம் படிப்பகமாக உள்ளது. இந்த இல்லத்தில் கலைஞருக்கு மார்பளவு வெண்கல சிலை உள்ளது. மேலும் கலைஞர் தந்தை முத்துவேலர், தாயார் அஞ்சுகம், முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் ஆகியோரின் சிலை உள்ளது.

இல்லத்தில் கலைஞர் முதல்வராக இருந்த போது தேசிய தலைவர்கள் சந்திப்பு, வெளிநாடு சுற்றுப் பயணம், தலைவர்கள் சந்திப்பு, கலைஞர் ஆட்சியின் சாதனை கொண்ட புகைப் படங்கள் உள்ளன. கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அஞ்சுகம், முத்துவேலர் அறக்கட்டளை ஏற்பாட்டில் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினாள். மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் உமதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இலமேகநாதன், ப.கோவிந்த ரசசன், . க. ராஜேந்திரன், க.மறைமலை,

மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ. ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண் ணன், கற்ப



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்பு பொதுமக்களுக்கும், பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த பயணிகளுக்கும், பேருந்தில் பயணித்த பயணிகளுக்கும் இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்வில் 73வது வட்ட செயலாளர் எம்.தமீம், 73அ வட்ட துணை செயலாளர் சுரேந்தர், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் கௌதம், தகவல் தொழில்நுட்ப அணி பகுதி ஒருங்கிணைப்பாளர் ஸ்டீபன் மற்றும் கழக நிர்வாகிகள் மாவீரன், தவமணி, அரவிந்த், ஜோன்ஸ் ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்ட கழகத்தின் சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வட்ட கழக செயலாளரும் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் ஏற்பாட்டில் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. உடன் கே.சி.ராஜா, எஸ்.கிருஷ்ணன், ஏ.முருகேசன், எம். சரஸ்வதி, மீஞ்சூர் முகுந்தன், எஸ்.ராஜா, எஸ்.கமருதீன், எஸ்.தங்கபாலா, ஏ.சிவகுமார், எம்.பி. பாலு, ப.தாமோதரன், பி.தயாளன், ஆர். கிருஷ்ணவேணி, புல்லட் செல்வராஜ், மணிகண்டன், தமிழ்ச்செல்வன், ஆலன்ராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### சென்னை – கோடம்பாக்கம் மண்டலத்தில்

# ரூ.75 லட்சம் மதிப்பில் விளையாட்டுத் திடல் - சிறுவர் பூங்கா!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 4

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கோடம்பாக்கம் மண்டலம், வடபழனி, அம்மன் கோவில் தெருவில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் மற்றும் சிறுவர் விளையாட்டு பூங்காவினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் நேற்று (03.06.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு130, வடபழனி, அம்மன் கோவில் தெரு, சிம்ஸ் மருத்துவமனை அருகில் தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் மற்றும் சிறுவர் விளையாட்டு பூங்காவினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

2010 ச.மீ. பரப்பளவு கொண்ட திறந்தவெளி நிலமானது விளையாட்டுத் திடலாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த விளையாட்டுத் திடலில், கபடி விளையாட்டு மைதானம், வலைப்பயிற்சியுடன் கூடிய கிரிக்கெட் விளையாட்டு மைதானம், இறகுப்பந்து மைதானம், திறந்தவெளி உடற்பயிற்சி சாதனங்கள், சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், சதுரங்கம் மற்றும் கேரம்விளையாட்டிற்கான உள் அரங்கம், பூச்செடிகள், நடைபாதை, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இரண்டு கழிப்பறைகள் உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.கருணாநிதி (தியாகராயநகர்), த.வேலு (மயிலாப்பூர்), துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மாமன்ற உறுப்பினர்கள் சு.பாஸ்கர், கே. ஏழுமலை, திருமதி. ஆர். ரத்னா லோகேஸ்வரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்: தி.மு.தனியரசு நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் 1000 பேருக்கு இனிப்பு - உணவு!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜூன் 4 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் ஜூன் 3ஆம் நாள் செம்மொழி நாள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு 1000 பேருக்கு இனிப்பு மற்றும் மதிய உணவு வழங்கும் விழா 3.6.2025 - செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு சன்னதி தெரு பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சி ஏற்பாடு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு செய்திருந்தார்.

பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமை வகித்தார்.

குறிஞ்சி எஸ்.கணேசன், எம்.வி.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல்.சரவணன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சத்திஸ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், எஸ்.பாஸ்கர், ஆர். ரஜினிபாபு, ஒய்.நந்திவர்மன், டி.டி.எம்.பாபு,

பி.எஸ்.சைலஸ், வி.பழணிவேல், ம.ஜெயராமன், ஆர்.டில்லி, அ.அப்துல்சலிம், கே.கார்த்திகேயன், ம.எத்திராஜ், ப.சந்தான கிருஷ்ணன், ஆர்.தினேஷ் குமார், முருகா.எஸ்.ஆறுமுகம், எஸ்.பொன்னி வளவன், எஸ்.ஆர்.மலைராஜ் ஆகியோர் வரவேற்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கழக கொடி ஏற்றி பள்ளி மாணவ மாணவிகளுக்கு பையும் கல்லூரி பயிலும் மாணவி ரித்விக்கா அவர்களுக்கு நிதி உதவி வழங்கி பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்.

இதில் சாந்தி பக்தன், திருசங்கு, ஆர்.டி.மதன்குமார், எம்.எம்.செந்தில், எம்.கோமலவள்ளி, கு. தமிழ்மணி, ரா.மோகனசுந்தரம் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பகுதி அணியின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

10வது வட்டச் செயலாளர் எஸ்.தமிழ்செல்வன் நன்றி கூறினார்.

கம்நீலமேகம், பொதுக்குழு உறுப்பினர்கள் இலபழனியப்பன், கோசிகுமார், எல். எஸ்.ஈ. பழனியப்பன்,ஒன்றிய கழக செயலாளர்கள் ஆ..தாமஸ் ஆல்வா எடிசன், சோ.பா. மலர்வண்ணன், கே. பழனியப்பன், மகா. குமார்,விக்கல் என்ஆனந்த, உதயம் வே. முருகையன், பேரூர் செயலாளர்கள் காஅட்சயலிங்கம், மரியசார்லஸ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அ.பாரி பாலன், தமயந்தி, கே .சத்தியமூர்த்தி துணை அமைப்பாளர்கள் , வீரராகவன், செந்தில், தியாகராஜன், ஜோதிபாசு. லோகநாதன், சம்பத்,, சண்முகநாதன், , கலைஞர் இல்ல காப்பாளர் தியாகராஜன். ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவாகள் கலந்து கொண்டனர். முன்னதாக கலைஞரின் தந்தை முத்துவேலர், தாயார் அஞ்சுகம், முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் ஆகியோர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.



தாம்பரம் மாநகர திமுக மற்றும் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் முன்னிட்டு மேற்கு தாம்பரம் அண்ணா பேருந்து நிலையம் அருகில் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் ஏற்பாட்டில் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., கலந்து கொண்டு தலைவர் கலைஞர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி வணங்கி 5000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் மேயர்.க.வசந்தகுமாரி 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன் செம்பாக்கம் பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, செ.சுரேஷ்,ரமணி ஆதிமூலம், பகுதி கழக நிர்வாகிகள் கி.வேல்மணி,எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிக்குமார், இரா.செல்வகுமார், ஆர்.அகஸ்டின், டி.கே.தாமஸ், ஆர்.செல்வகுமார், இரா.ரத்தினகுமார், இரா.விஜயகுமார், கி.மாறன், ச.ராஜேஷ், வி.கார்த்திக், எஸ்.சீனிவாசகுமார், எல்.பேகம், புவனேஸ்வரி, க.முனுசாமி, எஸ்.வி.தனசேகர், தங்கராஜ், சித்திரம்வாசு, எம்.ரவிகுமார், எம்.ரமேஷ், எஸ்.ரமேஷ், பட்டுராஜன், கணபதி, மா.கன்னியப்பன், பி.காளியப்பன், க.மு.சூர்யா, எம்.மதன்குமார், இ.நவீன் உள்ளிட்ட மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் கழக தோழர்கள், பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தது போல் செம்மொழி நாளாக மலேசியா நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாப்பட்டது. அயலக திமுக அமைப்பாளர் எம்.எஸ்.பி. முஹம்மது பிரதௌஸ் கான் மற்றும் துணை அமைப்பாளர் எம்.கே.முகம்மது ஜெய்லானி, ஏ.முஹம்மது இர்ஷாத் துல்லா, எல்.சார்லஸ் (எ)ஜோசப் அகஸ்டின், ஜெயசீலன், எச்.முகம்மது ரபிக்,முன்னிலையில் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் தமிழர், சீனர்கள், மலய்காரர்கள், சீக்கியர்கள் உள்ளிட்ட அனைத்து சமூக மக்களுக்கும் உணவு அளிக்கபட்டது.மலேசியாவின் கோலாலும்பூர், பினாங்கு, ஜோகூர், பேராக்உள்ளிட்ட இடங்களிளிலும் செம்மொழிநாயகன் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை உடன்பிறப்புக்கள் சிறப்பாக முன்னேடுத்து வருகின்றனர்.